சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–31.08.2020

**<u>சாதாரணக்கூட்டம்</u>**

திருவள்ளுவர் ஆண்டு, சார்வரி வருடம் ஆவணி மாதம் 15–ஆம் நாள் ( ஆகஸ்ட் திங்கள் 31–ஆம் நாள்:– 31.08.2020) திங்கள் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னனனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியில் கிருமி நாசினி தெளிக்கும் பணியில் பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களில் அவ்வப்போது ஏற்படும் சிறு சிறு பழுதுகளை பொது சுகாதாரம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக பழுது நீக்கம் மேற்கொண்டு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.20000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொது சுகாதாரம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2191/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **86, நாள்.31.08.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா பரிசோதனை மேற்கொள்பவர்கள் விவரங்கள் அடங்கிய படிவம் (Swab Form) அச்சிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.4900/— மற்றும் கொரோனா பரிசோதனையில் பாதிப்பு உறுதி செய்யப்பட்ட நபர்களை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து (Shiffting Form) மருத்துவமனைக்கு தர வேண்டிய படிவம் நகல் எடுத்த வகையில் ஆன செலவினம் ரூ.4900/—என ஆக மொத்தம் ரூ.9800/—ஐ நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு.M.B.செந்தில்ராம்குமார் அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2393/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **87, நாள்.31.08.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று பரிசோதனை மேற்கொண்டவர்களின் வீடுகளில் பரிசோதனை முடிவிற்காக காத்திருப்போர் என்ற விவரம் அடங்கிய ஒட்டும் ஸ்டிக்கர் ஒட்ட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தியதை தொடர்ந்து, 100 எண்ணம் ஒட்டும் ஸ்டிக்கர் அச்சிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.2700/—ஐ நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு.M.B.செந்தில்ராம்குமாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2190/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **88, நாள்.31.08.2020**
**தீர்மானம்**

*******

பொருள் எண்.4

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக பொது இடங்களில் வாகனங்கள் நிறுத்தக் கூடாது , தடை செய்யப்பட்ட பகுதி என விளம்பர அறிவிப்பு பதாகைகள் (Flex) 50 எண்ணம் அச்சிடும் பணிக்கு 18.08.2020—ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பிரிண்ட் டெக் டிஜிட்டல் பிரிண்டிங், சின்னமனூர் 1 எண்ணம் | ரூ.200/— |
| 2. | ஸ்ரீ முத்து மினி ஆப் செட், சின்னமனூர் — 1 எண்ணம் | ரூ.230/— |
| 3. | வீனஸ் ஆப்செட், சின்னமனூர் — 1 எண்ணம் | ரூ.250/— |

அலுவலகக் குறிப்பு:— **மேற்படி மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த பிரிண்ட் டெக் டிஜிட்டல் பிரிண்டிங், சின்னமனூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம். (ந.க.எண்.2140/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **89, நாள்.31.08.2020**

**தீர்மானம்**

*******

பொருள் எண்.5

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக தொற்று அதிகம் உள்ள பகுதிகள் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் என அறிவிப்பு விளம்பர பதாகைகள் 100 எண்ணம் அச்சிடும் பணிக்கு 18.08.2020 ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பிரிண்ட் டெக் டிஜிட்டல் பிரிண்டிங், சின்னமனூர் 1 எண்ணம் | ரூ.160/— |
| 2. | ஸ்ரீ முத்து மினி ஆப் செட், சின்னமனூர் — 1 எண்ணம் | ரூ.180/— |
| 3. | வீனஸ் ஆப்செட், சின்னமனூர் — 1 எண்ணம் | ரூ.210/— |

அலுவலகக் குறிப்பு:— மேற்படி மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த பிரிண்ட் டெக் டிஜிட்டல் பிரிண்டிங், சின்னமனூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண்.2138/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **90, நாள்.31.08.2020**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.6

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று அதிகம் உள்ள கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் வாகனங்கள் நிறுத்த தடை செய்யப்பட்டுள்ளது என விளம்பர பதாகைகள் அச்சிடும் பணிக்கு 18.08.2020–ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழக்கண்ட விவரப்படியான விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பிரிண்ட் டெக் டிஜிட்டல் பிரிண்டிங், சின்னமனூர் 1 எண்ணம் | ரூ.160/– |
| 2. | வீனஸ் ஆப்செட், சின்னமனூர் – 1 எண்ணம் | ரூ.175/– |
| 3. | ஸ்ரீ முத்து மினி ஆப் செட், சின்னமனூர் – 1 எண்ணம் | ரூ.190/– |

அலுவலகக் குறிப்பு:– **மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த பிரிண்ட் டெக் டிஜிட்டல் பிரிண்டிங், சின்னமனூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2139/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **91, நாள்.31.08.2020**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.7

இந்நகராட்சியின் பொறியியல் பயன்பாட்டில் உள்ள வாகன எண்.TN60Q4981க்கு சில மராமத்துப் பணி மேற்கொள்ள, முன் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து 04.08.2020–ஆம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ராமர் டிங்கர் & வெல்டிங் ஒர்க்ஸ், கம்பம் | ரூ.15450/– |
| 2. | சரவணா எலக்ட்ரிகல் ஒர்க்ஸ், கம்பம் | ரூ.15950/– |

அலுவலகக் குறிப்பு:–

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் ராமர் டிங்கர் & வெல்டிங் ஒர்க்ஸ், கம்பம் நிறுவனத்தின் விலைப்புள்ளியின் விலை விகிதம் குறைவாக இருப்பதால் மேற்படி ராமர் டிங்கர் & வெல்டிங் ஒர்க்ஸ், கம்பம் நிறுவன விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3245/2017/இ2).**

**தீர்மான எண், நாள்** **92, நாள்.31.08.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.8**

இந்நகராட்சியின் பொறியியல் பயன்பாட்டில் உள்ள வாகன எண்.TN60Q4963க்கு சில மராமத்துப் பணி மேற்கொள்ள, முன் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து **04.08.2020–**ஆம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ராமர் டிங்கர் & வெல்டிங் ஒர்க்ஸ், கம்பம் | ரூ.15450/– |
| 2. | சரவணா எலக்ட்ரிகல் ஒர்க்ஸ், கம்பம் | ரூ.15950/– |

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் ராமர் டிங்கர் & வெல்டிங் ஒர்க்ஸ், கம்பம் நிறுவனத்தின் விலைப்புள்ளியின் விலை விகிதம் குறைவாக இருப்பதால் மேற்படி ராமர் டிங்கர் & வெல்டிங் ஒர்க்ஸ், கம்பம் நிறுவன விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3462/2017/இ2).**

**தீர்மான எண், நாள்** **93, நாள்.31.08.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சியின் பொது பிரிவு பயன்பாட்டில் உள்ள வாகனம் வண்டி எண்.TN60S6634க்கு நான்கு டயர்கள் (MRF) வாங்கி பொருத்தும் பணிக்கு, முன் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து **03.08.2020–**ஆம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | சிவகேச டயர்ஸ், தேனி | ரூ.25600/– |
| 2. | லெட்சுமி டயர்ஸ், சின்னமனூர் | ரூ.26700/– |
| 3. | Haj Tyres, கம்பம் | ரூ.27300/– |

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் சிவகேச டயர்ஸ், தேனி நிறுவனத்தின் விலைப்புள்ளியின் விலை விகிதம் குறைவாக இருப்பதால் மேற்படி சிவகேச டயர்ஸ், தேனி விலைப்புள்ளிதாரரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7057/2014/இ2)**

**தீர்மான எண், நாள்** **94, நாள்.31.08.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் கொரோனா வைரஸ் (COVID-19) தொற்றால் பாதிக்கப்படும் பகுதிகளை தடுப்பு அரண் (Barricade) அமைத்து, மேற்படி தொற்று பரவாமல் தடுக்கும் பணிக்குத் தேவையான மரக்கம்புகள், ஜி.ஐ.ஷீட், பிவிசி கயிறு மறைப்பு மற்றும் 4”x3” பிளக்ஸ் கொண்ட கொரோனா வாசகத்தினால் ஒட்டுதல் உள்ளிட்ட பணிக்கு, உபகரணங்கள் சப்ளைக்கு 26.06.2020–ஆம் நாளிட்ட குறைந்த விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | மரக்கம்புகளால் சாலையின் குறுக்கே தடுப்பு அரண் அமைக்க ஒரு மீட்டருக்கு | ரூ.216/– |
| 2. | ஜி.ஐ.ஷீட் கொண்டு தடுப்பு அமைத்தல் ஒரு எண்ணம் | ரூ.1200/– |
| 3. | பிவிசி கயிறு கொண்டு மறைப்பு அமைத்தல் ஒரு மீட்டருக்கு | ரூ.45/– |
| 4. | 4”x3” பிளக்ஸ் – கொரோனா வாசகம் அமைத்தல் ஒரு எண்ணம் | ரூ.400/– |

மேற்கண்டவாறு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.கா.வனராஜ், சின்னமனூர் என்பவரின் விலைப்புள்ளியினை ஒப்புதல் செய்யவும், பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு ஆன செலவினம் தொகை ரூ.2,10,666/–ஐ 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–இன் கீழ் மேற்கொண்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **பதிவு செய்யலாம்.**

**தீர்மான எண், நாள்** **95, நாள்.31.08.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் 2017–2018 முதல் 2019–2020 வரை நடைபெற்ற திட்டப் பணிகளை தினமணி தினசரி நாளிதழில் பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.10000/– M/s Express Publications (Madurai) Private Limited, Madurai அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0248/2019/இ1)**

**தீர்மான எண், நாள்** **96, நாள்.31.08.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்படும் பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் (BOV) 23 எண்ணம் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வதில் சுணக்கம் ஏற்படுவதுடன் குப்பைகளை அகற்றுவதில் தொய்வு ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட வாகனங்களை ஆண்டு பராமரிப்பு செலவினம் மூலமாக சிறு பழுதுகளை மேற்கொண்டு ஆண்டு முழுவதும் பராமரிப்பு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **97, நாள்.31.08.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.13**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் 2017–2018 முதல் 2019–2020 வரை நடைபெற்ற திட்டப்பணிகளை 74வது சுதந்திர தின நல்வாழ்த்துக்கள் தெரிவித்து தினகரன் தினசரி நாளிதழில் 15.08.2020ம் அன்று பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.8668/– M/s.Kal Publications Private Limited, Madurai அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1226/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **98, நாள்.31.08.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.14**

சின்னமனூர் நகராட்சியின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள நீர்வடிப்பான் தொட்டியில் உள்ள Butterfly Value –இல் Gear Wheel பழுதடைந்துள்ளதை கழற்றி புதிய Wheel மாற்றியமைக்கும் பணி, குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள மோட்டார் பம்பு அறையில் உள்ள இரண்டு 200mm சுலீஸ் வால்வுகள், ஸ்பிண்டில்ராடு தேய்மானம் அடைந்ததை கழற்றி பிராஸ் வெல்டிங் செய்யும் பணி மற்றும் பொன்னகர் பகுதிக்கு செல்லும் “D” மெயினில் 100mm சுலீஸ் வால்வு பழுதடைந்துள்ளதை கழற்றி பிராஸ் வெல்டிங் செய்யும் பணி, மேலும் வெள்ளையன் தெருவிற்கு “D” மெயினில் 100mm சுலீஸ் வால்வு பழுதடைந்துள்ளதை கழற்றி பிராஸ் வெல்டிங் செய்யும் பணியை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ம் வருடத்திய பிரிவு 15–இன் கீழ் திரு.கே.வனராஜ் ஒப்பந்ததாரர் மூலம் செய்வதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0346/2019/இ2)**

**தீர்மான எண், நாள்** **99, நாள்.31.08.2020**

**தீர்மானம்**

*******

பொருள் எண்.15

சின்னமனூர் உள்ளூர் திட்டக்குழும எல்கைக்குட்பட்ட பழைய சர்வே எண்கள்.188/2 பகுதி, 189/2 பகுதி மற்றும் 190/3B2, வார்டு –D, பிளாக்–16, நகரளவு எண்கள்.3/9, 4/4 மற்றும் 5/7–இல் கட்டுப்பட்டுள்ள 0.60 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க உத்தேசித்ததில் மாவட்ட நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநர், தேனி அவர்களின் அலுவலக கடித ந.க.எண்.73/2020/தே.மா.2இன்படி மேற்காணும் உத்தேச மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தின்படி நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட வேண்டிய சாலைகள், மூலை முடக்குகளுடன் நகராட்சி உபயோக இடம் போன்றவற்றை தானமாக ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, மனுதாரர் திரு.எம்.குமரேசன் த/பெ.முத்து நாயகம் பிள்ளை என்பவரால் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தின்படி மேற்படி மனைப்பிரிவில் அமையப்பெறும் சாலையினை, தார்சாலை தன்மையுடன் அமைத்தும், சாலையின் இருபக்கங்களிலும், வடிகால், துப்புரவு வசதி, தேவையான பாலங்கள் அமைத்து, மனைப்பிரிவில் அமையும் சாலையின் நீளம் மற்றும் அகலம், மூலை முடக்கு அளவுகளை குறிப்பிட்டும், உள்ளாட்சி உபயோகத்திற்கு என ஒதுக்கப்பட்ட 12.60 ச.மீ பரப்பளவு உள்ள இடம் போன்றவை, பத்திர பதிவு ஆவண எண்.3405/2020, நாள்.27.08.2020–இன்படி நகராட்சி ஆணையாளர் பெயருக்கு, தானப்பத்திரப்பதிவு செய்து, உரிய அசல் ஆவணம் ஒப்படைத்துள்ளார், மேலும் மனைப்பிரிவில் அமையும் TANGEDCO துறைக்கு உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட 12.60 ச.மீ பரப்பளவு உள்ள இடமானது மேற்பார்வை பொறியாளர் பெயருக்கு, பத்திரப் பதிவு ஆவண எண்.3408/2020, நாள்.27.08.2020–இன்படி தானப்பத்திரப் பதிவு செயது, அதற்கு உரிய நகலினை சமர்ப்பித்துள்ள விவரம், நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1.மனைப்பிரிவில் அமையும் சாலைகள், உள்ளாட்சி உபயோக இடம் போன்றவற்றை தானமாக வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.**<br>**2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி அவர்களுக்கு உரிய மேல் நடவடிக்கைக்கு அனுப்புவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1123/2020/எப்1)** |
| **தீர்மான எண், நாள்** | **100, நாள்.31.08.2020** |
| **தீர்மானம்** | |

*******